# Metcea News

(CHENNAI SUBURBAN)

THE CIVIL ENGINEERING NEWS LETTER

(Reg. No.41/2022)

MAY - 2024 | Issue 3 | Editor: Er. S. Jegadeesan, Co-Editor: Er. S. KARTHIKEYAN





## President Message

*My Dear Engineer friends, our association is running successfully with the welfare of engineers in mind. Recruit your fellow engineer friends as members to further strengthen this. It can also document them to get technical advice, career protection and career assistance through our association. Let's move forward and thank you.*

With regards, **Er.S.Karthikeyan,** PRESIDENT, METCEA

## FACEAT & p-ICPL CRICKET MATCH



**மூதுரை** இன்னா இளமை வறுமை வந்து எய்தியக் கால் இன்னா அளவில் இனியவும் – இன்னாத
நாள் அல்லா நாள் பூத்த நன் மலரும் போலுமே ஆள் இல்லா மங்கைக்கு அழகு.

இளமையில் வறுமையும், இயலாத முதுமையில் செல்வமும் பெற்றால் அதனால் துன்பமே. அனுபவிக்க முடியாது. அது பருவமில்லாத காலங்களில் பூக்கும் பூக்களைப் போன்றது. அதைப்போல துணைவனில்லாத பெண்களின் அழகும் வீணே.

## MINISTER MEET



**வீட்டுவசதித் துறை அமைச்சர் மாண்புமிகு. முத்துசாமி** அவர்களை சந்தித்த இனிய தருணம் 1. பொறியாளர் கவுன்சிலுக்கான பரிந்துரை, 2. அனுமதி அற்ற மனை நிலங்கள் ஆன்லைன் பதிவு நீட்டிப்பு 3. மாவட்ட DTCP அலுவலகங்களில் பதிவு பெற்ற பொறியாளர்களுக்கான அலுவலக அறை 4. கட்டுமான பொருட்களுக்கான விலை நிர்ணயக் குழு அமைத்திட பரிந்துரை 5. அனுமதி பெற்ற பொறியாளர்கள் மாநிலம் முழுமைக்கான ஒரே இடத்தில் ஒரு பதிவு 6. சிங்கிள் விண்டோ சிஸ்டம் ஆன்லைன் பதிவுக்கான பயிற்சி பட்டறைகள் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்த இனிய தருணம். உடன் METCEA செயலாளர் MC வசந்தகுமார் மற்றும் நிர்வாகிகள் by PST.

## TNCCM-METCEA TECHNICAL SEMINAR












**முதுரை**

**அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய் நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.**

நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். நம் நிலை தாழ்ந்தாலும் நற்பண்புள்ளோர் சிறந்தவர்களாகவே பழகுவர். அவர்கள் நட்பு எவ்வளவு காய்ச்சினாலும் சுவை குன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டு சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கினைப் போன்றது அவர் நட்பு.



## EC MEETING





## நினைவேந்தல்
















**மூதுரை** அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா – தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம் பருவத்தால் அன்றிப் பழா.

கிளைகளோடு கூடிய நீண்ட மரங்களும் பருவத்தில் மட்டும் பழங்களைத் தரும். அதுபோல மேன்மேலும் முயன்றாலும் நாம் செய்யும் கார்யங்கள் தகுந்த காலம் கூடினால் மட்டுமே பயன் தரும்.

## ARPATTAM




















### மெட்ரோ பாலிட்டன் சிவில் இன்ஜினியர் அசோசியேஷன் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



சென்னை : மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மெட்ரோ பாலிட்டன் சிவில் இன்ஜினியர் அசோசியேசன் சார்பாக சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு சங்கத்தின் நிறுவனத் தலைவர் பொறிஎஸ்.ஜெகதீசன் தலைமை மதாங்கினார் ஆர்ப்பாட்டத்தில் பேசியது கட்டுமான பொருட்களின் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த விலை நிர்ணயக் குழுவை அரசு அமைத்திட வேண்டும். நாங்கள் கட்டுமான பணியினை தொடங்குவது என்றால் 9 துறையை அணுகி தான் எங்கள் பணியினை மேற்கொள்ள வேண்டி உள்ளது ஆகையால் கட்டுமானத் துறைக்கு என்று அரசு தனி அமைச்சகம் அமைத்திட வேண்டும். மேலும் எங்கள் பணிகளுக்கு 18% ஜி.எஸ்.டி வரியை அரசு நிர்ணயித்துள்ளது அதனை குறைக்க வேண்டும். அரசுக்கு வருவாய் ஈட்டுகின்ற விதத்தில் விவசாயத்துக்கு அடுத்து கட்டுமான துறை தான் ஆகையால் என்னுடைய கோரிக்கையை ஏற்று விலை ஏற்றத்தை கட்டுக்குள் வைக்க அரசு முன்வர வேண்டும் என்று கூறினார். உடன் இவர்களுக்காக ஆதரவாக லாரி உரிமையாளர் சங்க தலைவர் யுவராஜ் கலந்து கொண்டார். மற்றும் சங்கத்தின் தலைவர் எஸ். கார்த்திகேயன், செயலாளர் எம். சி. வசந்தகுமார், பொருளாளர் எம். செந்தில் குமார், துணைத் தலைவர்கள் துரைமுருகன், சுதர்சன், உதவி தலைவர். வெற்றிச்செல்வன் உட்பட சங்க உறுப்பினர்கள் மற்றும் கட்டுமான ஊழியர்கள் பெருமளவில் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



தினமலர்

ஜல்லி, எம்.சாண்ட் விலை உயர்வு
பொறியாளர்கள் சங்கம் ஆர்ப்பாட்டம்

**ஜல்லி, எம்.சாண்ட் விலை உயர்வு பொறியாளர்கள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

பிராட்வே, மார்ச் 12– ஜல்லி, எம்.சாண்ட் உள்ளிட்ட கட்டுமானப் பொருள்களின் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த தமிழக அரசின் சார்பில் விலை நிர்ணயக் குழு அமைக்கக்கோரி, பெருநகர சிவில் பொறியாளர்கள் சங்கம் சார்பில் சென்னை கலெக்டர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

அப்போது, சங்க நிறுவன தலைவர் பொறியாளர் ஜெகதீசன் கூறியதாவது:

ஒரு கட்டடத்தின் பணியை ஆரம்பிக்கும் போது கட்டுமான பொருள்களின் விலை ஒன்றாகவும், முடிக்கும் போது வேறு ஒன்றாகவும் உள்ளது.

கடந்த ஒரு மாதத்தில் ஜல்லி, எம்.சாண்ட், பி செண்ட் உள்ளிட்டவற்றின் விலை 35 சதவீதம் உயர்ந்துள்ளது.

குவாரி உரிமையாளர்கள் தன்னிச்சையாகசிண்டிகேட் அமைத்து, எந்த காரணமுமின்றி விலையை உயர்த்தி வருகின்றனர். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலவில்லை. 500 கோடி ரூபாய் மதிப்பிலான கட்டட பணிகள் தடைபட்டுள்ளன.

கட்டுமான பொருள்களின் விலையை கட்டுப்படுத்துவதற்கு தமிழக அரசின் சார்பில் விலை நிர்ணய குழு அமைக்க வேண்டும். அந்த விலை நிர்ணய குழுவில் அரசின் பிரதிநிதி, ஐ.ஐ.டி., பேராசிரியர், உபயோகிப்பவர், விற்பனையாளர், சங்க பிரதிநிதி உள்ளிட்டோர் இடம் பெற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்தக் கோரி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெருநகர சிவில் பொறியாளர்கள் சங்கத்தினர். இடம்: பிராட்வே.

## KAG EXPO














**முதுரை**

**உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர் பற்றலரைக் கண்டால் பணிவரோ ? – கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும் பாரம் தாங்கின் தளர்ந்து விளையுமோ தான்.**

கல்தூண் ஓரளவுக்கு மேல் பாரத்தை ஏற்றினால் உடைந்து விழுந்து விடுமேயல்லாது, வளைந்து போகாது. அது போலவே மானக்குறைவு ஏற்பட்டால் உயிரை விட்டுவிடும் தன்மையுள்ளவர்கள் எதிரிகளைக் கண்டால் பணிவதில்லை.



**Editor: Er. S.Jagadeesan, METRO CIVIL ENGINEERS ASSOCIATION (CHENNAI SUBURBAN), Cell : 8072606107**